Deposition of Witness
In the court of the Additional Subordinate Judge, Tenkasi.
Mcop 254 of 2019
ம.சா.1 சாகுல் ஹமீது

| | | |
|---|---|---|
| Name | | சாகுல் ஹமீது |
| Father's Name | | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

---

14.09.2022 சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர். என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து உள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ1. டிஸ்சார்ஜ் சம்மரி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ2. டி.என். 72.ஏஏ9309 என்ற வாகனத்தின் ஆர் சி புக் ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ3. மேற்படி வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ4. மருத்துவ பரிந்துரை சீட்டுக்கள் எண்ணம் 3 ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ5. மைனர் மனுதாரர் மீது மோதிய வாகனம் சேதம் அடைந்ததை காட்டும் புகைப்படம் எண்ணம் 4 சிடியுடன் அசல் ம.சா.ஆ6. மைனர் மனுதாரரின் காயத்தை காட்டும் புகைப்படம் சிடியுடன் கூடியது எண்ணம் 11 அசல் ம.சா.ஆ7. ஸ்கேன் அறிக்கை எண்ணம் 4 ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ8. ரூ.3333/-க்கான மருத்துவ பில்கள் எண்ணம் 5 அசல் ம.சா.ஆ9. மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் காயம்பட்டது என் மகன். என் மகன் பெயர் அப்துல் ரகுமான். என் மகன் தற்போது என்ன செய்து வருகிறான் என்றால் படித்து வருகிறான். விபத்து சமயத்தில் என் மகன் எங்கே சென்றான் என்றால் கடைக்கு போய் கொண்டிருந்தான். என் மகன் பள்ளியில்

படித்துவருகிறான் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். விபத்திற்கு பின்பு என் மகன் தற்போதும் பள்ளியில் படித்து வருகிறான் என்றால் சரிதான். ஆனால் மருத்துவ சிகிச்சை எடுத்து வருகிறான். என் மகனின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மகன் விளையாடிக் கொண்டே கடைக்கு சென்றார் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது என்றால் சரியல்ல. ¨ 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.